**கவனிக்க.-** இந்த வர்த்தமானியின் பகுதி VI இல் கொழும்பு மாவட்ட நீதாசன வலயத்துக்குரிய 2018 ஆம் ஆண்டிற்கான யூரிமார் பெயர்ப்பட்டியலொன்று சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2087 - 2018 අගෝස්තු මස 31 වැනි සිකුරාදා - 2018.08.31

*2087 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (அ) - மாகாணசபை

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1152 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |

| | பக்கம் |
|---|---|
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.-** புலமைச் சொத்து (திருத்தம்) சட்ட மூலம் 2018, ஓகத்து 24 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறை நிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2018, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, செத்தெம்பர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1151 - B81445 - 5,403 (2018/8)

# *மாகாண சபை அறிவித்தல்கள்*

## *வடமேல் மாகாண மாகாண சபை*

*1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்கத்திற்கான இடுகாடு மற்றும் தனியார் இடுகாடு பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) கீழ் செய்யப்படும் அறிவித்தல் -2018*

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (இடைநேர் விளைவான) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் II ஆம் உப பிரிவின் (அ) பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 1946 ஆம் ஆண்டின் 57 ஆம் இலக்க பொது இடுகாடு மற்றும் தனியார் இடுகாடு பற்றிய கட்டளைச் சட்டத்தின் II ஆம் அத்தியாயத்தின் 5(1) பிரிவினால் மாகாண சபையின் உள்ளூராட்சி விடயப் பொறுப்புடைய அமைச்சருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரப்படி வடமேல் மாகாண சபையின் முதலமைச்சரும் உள்ளூராட்சி சபை அமைச்சருமான தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்கஆகிய என்னால், வடமேல் மாகாணத்தின் குருநாகல் மாவட்டத்தின் கல்கமுவ பிரதேச சபை அதிகாரப் பிரிவினுள் அமைந்துள்ள கீழ்க் காணப்படும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இடுகாட்டில் பிணங்களை புதைத்தல் அல்லது தகனம் செய்வதற்காக பொது இடுகாடாக இத்தால் பிரகடனபடுத்தப்படுகின்றது.*

*தசநாயக்க குணரத்ன பஸ்நாயக்க முதியன்சேலாகே தர்மசிறி தசநாயக்க,*
*வடமேல் மாகாண முதலமைச்சரும் நிதி, திட்டமிடல்,*
*பொறியியல் சேவை, நீதியும் சமாதானமும்,*
*கல்வி, உள்ளூராட்சி மன்றமும், மாகாண நிருவாக, பொருளாதார மேம்பாடு,*
*சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கலும் நீர்ப்பாசன*
*மற்றும் சுற்றுலா நடவடிக்கை அமைச்சரும்.*

*முதலமைச்சு அலுவலகம்,*
*குருநாகல்,*
*2017, திசெம்பர் 29.*

### *அட்டவணை*

*01.* ***நல்லச்சிய கல்லறை***

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 40, நல்லச்சிய கிராம அலுவலர் பிரிவில் நல்லச்சிய கிராமத்தில் க.கி.வ. 3427 இன் துண்டு இல. 57 இக்கான அளவில் 03 ஏக்கர், 01 றூட், 02 பர்ச்சஸ், (01 ஹெக்டயார் மற்றும் 01 ஹெக்டயாரில் ஆயிரத்தில் இடப்பங்கு 320 (1.32)) வடக்கிற்கு துண்டு இல. 56, கிழக்கிற்கு துண்டு இல. 58, தெற்கிற்கு மதவச்சி கிராம எல்லைகளுமாகிய க.கி.வ. 3419, மேற்கிற்கு துண்டு இல. 55 ஆம் நல்லந்நிய ஹேன என்ற பெயருடைய அரச காணி. (இலக்கம்/ 20 இக்கான வரைவு குறிப்பு)*

*02.* ***காட்டுவெவ கல்லறை***

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 42, காட்டுவெவ கிராம அலுவலர் பிரிவில் காட்டுவெவ கிராமத்தில் க.கி.வ. 3406 இன் துண்டு இல. 11 இக்கான அளவில் 03 ஏக்கர், 29 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 106, கிழக்கிற்கு துண்டு இல. 106 மற்றும் 16, தெற்கிற்கு துண்டு இல. 16 மற்றும் 12, மேற்கிற்கு துண்டு இல. 12 மற்றும் 106 கிராம எல்லைகளுமாகிய காட்டுவெவ என்ற பெயருடைய அரச காணி.*

*03.* ***தோரவ கல்லறை***

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 44, தோரவ கிராம அலுவலர் பிரிவில் மஹதோரவ கிராமத்தில் க.கி.வ. 3407 இன் துண்டு இல. 44 இக்கான அளவில் 02 ஏக்கர், 16 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 32, கிழக்கிற்கு உடதோரவ கிராமத்தின் எல்லையும் தெற்கிற்கு துண்டு இல. 45, மேற்கிற்கு துண்டு இல. 32 கிராம எல்லைகளுமாகிய தன்கஹ மையவாடியுமான அரச காணி.*

*04.* **நாஹெட்டிக்குளம் கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 45, நாஹெட்டிக்குளம் கிராம அலுவலர் பிரிவில் திம்பிரியாவ கிராமத்தில் க.கி.வ. 3299 இன் துண்டு இல. 09 இக்கான அளவில் 01 ஏக்கர், 38 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 06, கிழக்கிற்கு துண்டு இலக்கம் 08, தெற்கிற்கு துண்டு இல. 08, மேற்கிற்கு துண்டு இல. 08 கிராம எல்லைகளுமாகிய எஹெடுகஹபிடிய என்ற பெயரையுடைய அரச காணி.*

*05.* **இஹலகம (தாம்பரே) கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 46, இஹலகம கிராம அலுவலர் பிரிவில் தாம்பரே கிராமத்தில் க.கி.வ. 3290 இன் துண்டு இல. 8 இக்கான அளவில் 01 றூட், 31 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 06 மற்றும் 7, கிழக்கிற்கு துண்டு இலக்கம் 7, தெற்கிற்கு துண்டு இல. 54, மேற்கிற்கு துண்டு இல. 6 கிராம எல்லைகளுமாகிய தவலம்பிடிய ஹேன என்ற பெயரையுடைய அரச காணி.*

*06.* **நொச்சிய (அம்பகஹபிடிய) கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 48, நொச்சிய கிராம அலுவலர் பிரிவில் நொச்சிய கிராமத்தில் க.கி.வ. 3743 இன் துண்டு இல. 27 இக்கான அளவில் 03 றூட், 35 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 28, கிழக்கிற்கு துண்டு இலக்கம் 54, தெற்கிற்கு துண்டு இல. 32, மேற்கிற்கு துண்டு இல. 26 கிராம எல்லைகளுமாகிய அம்பகஹபிடிய என்ற பெயரையுடைய அரச காணி.*

*07.* **கொஹொம்பன்குளம் கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 49, கொஹொம்பன்குளம் கிராம அலுவலர் பிரிவில் கொஹொம்பன்குளம் கிராமத்தில் க.கி.வ. 3498 இன் துண்டு இல. 124 இக்கான அளவில் 01 ஏக்கர், 05 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 123, கிழக்கிற்கு துண்டு இலக்கம் 26, தெற்கிற்கு துண்டு இல. 26, மேற்கிற்கு துண்டு இல. 26 கிராம எல்லைகளுமாகிய துனுகஹமடலவத்த என்ற பெயரையுடைய அரச காணி.*

*08.* **பலுகொல்ல கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 50, பலுகொல்ல கிராம அலுவலர் பிரிவில் பலுகொல்ல கிராமத்தில் க.கி.வ. 3422 இன் துண்டு இல. 20 இக்கான அளவில் 02 ஏக்கர், 20 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 18 மற்றும் 19, கிழக்கிற்கு துண்டு இலக்கம் 18 தொடக்கம் 21 வரை, தெற்கிற்கு துண்டு இல. 21 மற்றும் 22, மேற்கிற்கு துண்டு இல. 19 மற்றும் 22 கிராம எல்லைகளுமாகிய சியம்பலாகஹ மையவாடி என்ற பெயரையுடைய அரச காணி.*

*09.* **பலுகொல்ல (தம்மென்னாவெடிய) கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 50, பலுகொல்ல கிராம அலுவலர் பிரிவில் தம்மென்னாவெடிய கிராமத்தில் க.கி.வ. 3421இன் துண்டு இல. 21 இக்கான அளவில் 03 ஏக்கர், 26 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 48, கிழக்கிற்கு துண்டு இலக்கம் 48 தொடக்கம் 20, தெற்கிற்கு துண்டு இல. 20 மற்றும் 22, மேற்கிற்கு துண்டு இல. 22 மற்றும் 48 கிராம எல்லைகளுமாகிய சோனியகல மூகலான என்ற பெயரையுடைய அரச காணி.*

*10.* **மஹகல்கமுவ கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 60, மஹகல்கமுவ கிராம அலுவலர் பிரிவில் கொஜராகம கிராமத்தில் க.கி.வ. 3198 இன் துண்டு இல. 33 இக்கான அளவில் 34 பர்ச்சஸ் ஆகிய வடக்கிற்கு துண்டு இல. 37, கிழக்கிற்கு ஹொரொவ் கால்வாய் மற்றும் தெற்கிற்கு துண்டு இல. 45, மேற்கிற்கு துண்டு இல. 45 மற்றும் 34 கிராம எல்லைகளுமாகிய அம்பலன்க மூகலான என்ற பெயரையுடைய அரச காணி.*

*11.* **பொரொத்துகடவல கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 64, பொரொத்துகடவல கிராம அலுவலர் பிரிவில் க.கி.வ. 3853 இன் துண்டு இல. 258 இக்கான அளவில் ஹெக்டயார் 0.0587 உடைய வடக்கிற்கு துண்டு இல. 257 மற்றும்*

*வலஸ்வெவ கிராம எல்லையும், கிழக்கிற்கு துண்டு இல. 257 மற்றும் 259, தெற்கிற்கு துண்டு இல. 259, மேற்கிற்கு வலஸ்வெவ கிராம எல்லைகளையுடைய வெவ்இஹல யாய என்ற பெயரையுடைய அரச காணி.*

*12.* **பாலுகடவல கல்லறை**

*வடமேல் மாகாணத்தில் குருநாகல் மாவட்டத்தில் கல்கமுவ பிரதேச செயலாளர் பிரிவின் இல. 73, பாலுகடவல கிராம அலுவலர் பிரிவில் எ. வ. 420017 இன் வரைபுத்திட்டத்தின் துண்டு இல. 178 அளவில் ஹெக்டயார் 0.3032 உடைய வடக்கிற்கு துண்டு இல. 174, கிழக்கிற்கு துண்டு இல. 179, தெற்கிற்கு துண்டு இல. 179, மேற்கிற்கு துண்டு இல. 208 கான பாலுகடவல கிராம எல்லைகளையுடைய மஹபிடயேயாய என்ற பெயரையுடைய அரச காணி.*

*8-1139*

---

# துணை விதிகள்

## பலாங்கொடை நகர சபையின்

இடைக்கால யாப்பு

*255 ஆவது அதிகாரத்தின் கீழ் உள்ள நகரசபையின் சட்டத்தில் 153 மற்றும் 154 ஆவது உறுப்புரைகளில் வழங்கியுள்ள தத்துவத்தின்படி சப்பிரகமுவ மாகாண சபையின் நிர்வாக பிரதேசத்தில் உள்ள பலாங்கொடை நகரசபையால் நிறைவேற்றிக் கொள்ளப்பட்ட கீழ்க்காணும் இடைக்கால யாப்பானது நகர சபை சட்டத்தின் 154 ஆவது உறுப்புரையின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் படி சப்பிரகமுவ மாகாண சபையின் ஆளுனரான என்னால் அனுமதிக்கப்பட்டுள்ளதென தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*நிலூகா ஏகநாயக,*
*ஆளுநர்,*
*சப்ரகமுவ மாகாணம்.*

*சப்ரகமுவ மகாண சபை.*
*2018, யூலை 12.*

**பலாங்கொடை நகர சபையின் வாரச் சந்தையினை கொண்டு நடாத்துதல், ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் தொடர்பான இடைக்கால யாப்பு**

*இடைக்கால யாப்பு தயாரிப்பதற்கு சபையிடமுள்ள அதிகாரமும்/ சட்ட ரீதியான உரித்து உடைமையும்.*

*1.* *1931 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைக்கான கட்டளை சட்டத்தின் மற்றும் 255 ஆவது அதிகாரத்தின் 153 (1) இன் உப விதப்புரையுடன் 157 ஆவது பரிந்துரையின் கீழ் பலாங்கொடை நகர சபைக்கு வழங்கப் பட்டுள்ள அதிகாரங்கள் அமுல்படுத்தப்படுகின்றன.*

*இடைக்கால யாப்பின் விடயங்களும் நோக்கங்களும்.*

*2.* *பலாங்கொடை நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில் வாரச்சந்தையினை கொண்டு நடாத்துதல், ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல்.*

*பெயர்.*

*3.* *இவ் இடைக்கால யாப்பு நகர சபையின் அதிகாரத்திற்குட்பட்ட பகுதியிலே வாரச் சந்தையினை கொண்டு நடாத்துதல், ஒழுங்குபடுத்துதல், மேற்பார்வை செய்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவம் செய்வதற்கான இடைக்கால யாப்பு என அறிமுகப்படுத்தப்படுகின்றது.*

4. வாரச் சந்தையின் சகல கட்டிடங்களும் செங்கற்கள், கற்கள் அல்லது நிரந்தர கட்டுமான பொருட்களாலே கட்டப்பட்டிருப்பதுடன் எல்லா சந்தைத் தொகுதி கட்டிடங்களினதும் தரைப்பகுதி கொங்கிறீட் இடப்பட்டு தரைப்பகுதியில் இருந்து ஓரடி உயரத்திற்காவது மேல் உயர்த்தி கட்டப்பட்டிருக்க வேண்டும். செயற்படுத்த வேண்டிய பொறுப்புக்கள்.

5. கூடாரங்களின் கூரைப்பகுதி தரமான தகரத்தினால் அமைக்கப்படுவதுடன், மழை நீர் முறையாக வழிந்தோடி வெளியேறுவதற்கு வகை செய்யப்பட வேண்டும்.

6. சில விஷேடமான சந்தைகளை தவிர்த்து பொதுவாக இரண்டு கடை வரிசைகளுக்கு இடையே இரண்டு மீற்றர் அகலம் இருத்தல் வேண்டும். அந்த நடை பாதைகள் நிலையான தரமான கட்டட பொருட்களால் ஆக்கப்பட வேண்டும். பாதசாரிகளின் போக்குவரத்திற்கு தடையாகாத வண்ணம் மழைநீர் வழிந்தோடக்கூடியதாக அமைய வேண்டும்.

7. வாரச் சந்தை கூடாரங்களின் உள்ளே அமைக்கப்படும் தட்டுகள் (ராக்கை) செங்கற்கள் அல்லது சீமெந்து கற்களால் அமைவதுடன் துருப்பிடிக்காத உலோகங்களினால் தட்டுகள் அமைய வேண்டும். தட்டுகள் சீமெந்து இடப்பட்டு மெழுகப்பட்டு அன்றேல் மாபிள் பிடிக்கப்பட வேண்டும். இவ்வாறு வர்த்தகக்கூடம் அவசியமற்ற சந்தர்ப்பத்தில் ஒவ்வொரு பகுதியும் பிரிகை தெளிவாக தெரிவதற்கு வெண்மையான கோடுகளால் அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

8. ஆண்/பெண் மற்றும் விசேட தேவை உடையோர்களுக்காக மலசல கூடங்கள் தனித்தனியாக அமைவதுடன், போதுமான மலசல கூடங்கள் அமைக்கப்படுவதுடன், அவற்றின் தரை மாபிள் பிடிக்கப்படுவதுடன் தரையிலிருந்து ஒரு மீற்றர் உயரம் வகை சுவர்களில் மாபிள் பொருத்தப்பட வேண்டும்.

9. சந்தைப்பகுதி சூழலில் சிற்றுண்டி அல்லது தேனீர்க்கடை முறையாக தாபிக்கப்பட்டு, கொண்டு நடாத்தப்படுவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதாகும்.

10. நகர சபையால் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்துடன் கிழமைச் சந்தையின் எல்லா வியாபார கூடங்களுக்கும் நுகர்விற்காக தேவைப்பாட்டிற்கமைய மின் இணைப்பை பெற்றுக் கொடுப்பது சபையின் கடமையாகும்.

11. சந்தையின் வியாபார கூடாரங்களின் அமைவிடத்தினை கருத்தில் கொண்டு நகர சபையினால் இறைச்சி, மீன், கருவாடு, காய்கறி, பழங்கள் மற்றும் சமையல் பாவனைப் பொருள், பண்டங்கள் விற்பனைக்காக சந்தைப் பகுதியினை பிரிகைக்கு உட்படுத்துவதும், அதற்கான வரைப்படத்தினை சந்தை புகுமுகத்திடலில் காட்சிப்படுத்துவதும் நகர சபையின் கடமையாகும்.

12. சுற்றாடலில் உருவாக்கப்படும் கழிவுகள்

(i) வெளியேற்றப்படும் உயிரினங்களின் கழிவுகள்
(ii) கண்ணாடித் துண்டுகள்
(iii) கடதாசியும் அதனுடன் தொடர்புடையவையும்
(iv) பொலித்தீன், பிளாஸ்டிக் மற்றும் ரெஜிபோம் போன்றவை
(v) இரும்பு மற்றும் உலோகம் அல்லது இரும்பு மற்றும் உலோகம் கலந்த வன்பொருட்கள்
(vi) ஆபத்து விளைவிக்கும் கழிவுகள்

இவை வெவ்வேறாக சேர்க்கக் கூடிய தொட்டில்கள், பீங்கான், தாங்கிகள் பொருத்தமான இடங்களில் வைப்பதுடன், உயிரினங்களின் கழிவுகளை இடுவதற்கு பாதுகாப்பான, இத்துடன் எலிகள், பூனைகள், இளையான்கள் மற்றும் ஏனைய விலங்குகள் உட்புகாத வண்ணம் நன்றாக மூடி முறையாக அப்புறப் படுத்தும் வழிமுறைகள் கைகொள்ளப்பட வேண்டும்.

13. சந்தை வியாபாரத்திற்காக ஒதுக்கப்படும் காணிகளின் அளவீடு தொடர்பாக சபையினால் தீர்க்கமான அடையாளமிடப்பட வேண்டும்.

14. சந்தை வணிகத்தில் ஈடுபடும் வியாபாரிகள் கூடாரங்களிலுள்ள தட்டுகள், ராக்கைகள் என்பவற்றினை சந்தை முடிந்த பின் துப்புரவு செய்து தூய்மைபடுத்த வேண்டும்.

15. தமது கூடாரங்களின் சந்தை வணிக நடவடிக்கை முடிவுற்ற பின்னர் வெளியேறும் சந்தர்ப்பங்களில் சகல மின் விளக்குகள், காற்றாடிகள் என்பன நிறுத்தப்பட்டு செயலிழப்பு செய்யப்பட வேண்டும்.

செய்யத்தகாத செயல்கள்.

16. விற்பனைக்காக கொண்டு வரப்படும் பொருட்கள் அன்றி பண்டங்களுக்காக பாவிக்கப்படும் உபகரணங்கள், உறைகள் அல்லது பொருள் தாங்கிகள் போன்றவற்றினை கொண்டு செல்லும் சந்தர்ப்பங்கள் தவிர்ந்த, வர்த்தக நடவடிக்கை இல்லாத வேளைகளில் இவற்றினை கண்ட கண்ட இடங்களில் வைக்க முடியாது. இவ்விடத்தில் 07 ஆம் விதப்புரையை மீறாது செயற்படுத்துவதுடன், மீறும் நடவடிக்கைகளுக்கு துணைப்போகக் கூடாது.

17. வாரச் சந்தையினுள்ளே தீர்மானிக்கப்பட்டு அடையாளப்படுத்தப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ள, மற்றும் நடமாடும் விற்பனை நிலையங்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள வர்த்தக கூடங்கள் அன்றி வேறு இடங்களில் வியாபாரத்தில் ஈடுபடக்கூடாததுடன், பாதசாரிகளுக்கு நடைபாதையில் தடைகளை ஏற்படுத்தக்கூடாது.

18. 9 ஆம் விதப்புரையிலே கூறப்பட்ட இடங்களில் அன்றி வேறு இடங்களில் எந்த ஒரு சமைத்தல் அல்லது அடுப்பு எரியூட்டல் நடவடிக்கை மேற்கொள்ளக்கூடாது.

19. பலாங்கொடை நகர சபைக்கு உரித்தான ஏதாவது ஒரு சந்தையில்,

(i) தகாத நடவடிக்கைகள் அல்லது சண்டை சச்சரவுகளில் ஈடுபடுதல், மதுபானம் பாவித்து குழப்பங்களை ஏற்படுத்துதல் அன்றி தூசன வார்த்தைகளை உபயோகித்தல், பிச்சை எடுத்தல் என்பனவும்,

(ii) நாளாந்த நடவடிக்கைகளின் பின்னர் சந்தைக் கூடங்கள் மூடப்பட்டதும் அங்கே தங்கி இருப்பதுவும்,

(iii) ஏதாவது கட்டடங்களில் அல்லது நிர்மாணங்களில் பொருத்தப்பட்டுள்ள அல்லது அழகிற்காக வளர்க்கப்பட்டுள்ள பூப்பாத்திகள், சாடிகள், பெயர்ப் பலகைகள் அன்றேல் பதாதைகளுக்கு சேதம் விளைவிப்பதும் அன்றேல் மாற்றி அமைப்பதும்,

(iv) பாவனைக்காக வழங்கப்பட்டுள்ள தண்ணீரை அசுத்தம் செய்வதும், அன்றேல் விரயம் செய்வதும் அன்றேல் வேறு வழிகளில் நாசம் செய்வதும், அந்நீரில் குளிப்பது, மிருகங்களை குளிப்பாட்டுவது மற்றும் காய்கறிகளை கழுவுவதற்காக ஒதுக்கப்பட்ட இடங்களை தவிர்ந்த ஏனைய இடங்களில் காய்கறிகளை கழுவுவதும்,

(v) மின்னிணைப்பு வழங்கப்பட்டுள்ள பதாதைகளுக்கு அண்மிக்க முடியாதவாறு வியாபார பண்டங்களை பரப்பி வைப்பதுவும், விளம்பர பதாதைகளுக்கு சேதம் விளைவிப்பதுவும்,

(vi) சட்டப்படி வழங்கப்பட்டுள்ள நீர்க்குழாய்களில் நேர்மையீனமாக நீர் இணைப்பை பெறுவதும் வஞ்சகமான முறையில் நீரைப்பெற்றுக் கொள்வதும்,

(vii) குறித்த விற்பனைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலையங்களில் அன்றி வேறு இடங்களில் காய்கறி, இறைச்சி அல்லது மீன் விற்பனை செய்வதும் அன்றேல் காட்சிப்படுத்துவதும்,

(viii) வாரச் சந்தை சூழலில் ஏற்படுத்தப்பட்டுள்ள வாகன தரிப்பிடங்களை தவிர்ந்த ஏனைய இடங்களில் ஈருளிகளை அன்றி மிதிவண்டிகள் மற்றும் எந்த ஒரு வாகனங்களையும் கொண்டு வருதல்.

எந்த ஒரு நபரும் செய்யக்கூடாதவையாகும்.

20. ஏதாவது ஆபத்தான தொழுநோய் அன்றேல் தோல் நோய் போன்றவற்றால் பீடிக்கப்பட்ட அல்லது அவ்வாறான நோயாளிக்கு பணிவிடை செய்த ஏதாவது நபரொருவர் நோய் தொற்றும் அல்லது பரப்பும் கால கட்டத்தை கடந்த ஒருவராக இருந்தால் வாரச் சந்தையில் ஏதாவது வணிக நடவடிக்கையில் ஈடுவடுவதோ அன்றேல் அவ்வாறான ஒருவரை ஈடுபடுத்தவோ கூடாது.

21. நன்றாக தூய்மையான ஆடை அணிந்திருந்தால் அன்றி அசுத்தமான தோற்றம் கொண்ட நபரொருவர் விற்பனைகளில் ஈடுபடுவதோ அவ்வாறான வேறு ஒருவரை ஈடுபடுத்துவதோ கூடாது.

22. பலாங்கொடை நகர சபையினால் வியாபாரத்திற்கு ஒதுக்கித் தரப்பட்டுள்ள குறித்த வகை பண்டங்கள் அன்றி வேறு வகையான பொருட்களையோ, பண்டங்களையோ வாரச் சந்தை கூடங்களில் விற்பதோ அன்றி அவற்றை காட்சிப்படுத்துவதோ எந்த ஒரு நபரும் செய்யத் தகாதவையாகும்.

23. மிருக வதை சட்டத்தின் கீழ் முறையான அனுமதி பத்திரங்களை பெற்றுக் கொண்டு இறைச்சிக் கூடங்களில் கொள்ளப்பட்ட மிருக இறைச்சியன்றி வாரச் சந்தையின் இறைச்சி விற்பனை கூடங்களில் இறைச்சி வகைகளை விற்பனை செய்வதோ, அன்றி அவற்றை காட்சிப்படுத்துவதோ எந்த ஒரு நபரும் செய்யக் கூடாதவையாகும்.

24. ஏதாவது இறைச்சிக் கூடங்களில் இறைச்சிக்காக மிருகக் கொலைகள், மிருக வதைச் சட்டம் 17 ஆம் விதப்புரையின் கீழ் குறித்த நாளொன்றில் வர்த்தமானி அறிவித்தலின் படி அதிகாரம் பெற்ற அலுவலரினால் தடை செய்யப்பட்டிருப்பின் அன்றைய தினம் வாரச்சந்தையின் எந்தவொரு விற்பனை கூடங்களிலும் இறைச்சி வகைகளை விற்பனை செய்வதோ அன்றி அவற்றை காட்சிப்படுத்துவதோ எந்த ஒரு நபரும் செய்யக் கூடாதவையாகும்.

25. எந்த ஒரு நபரும் சந்தைத் தொகுதிக்குள்ளே நாய், பூனை அல்லது பறவைகள் அல்லது ஏதாவது விலங்குகளை உள்ளே கொண்டு வருவதோ அன்றி கொண்டு வருவதற்கு இடமளிப்பதோ கூடாது. இவ்விதப்புரை பொலிசார் மோப்ப நாய்களை கொண்டு வருவதற்கு ஏற்புடையதாகாது.

26. அங்கீகாரம் பெற்றுக் கொண்டு குறித்த வணிகக் கூடம் ஒன்றில் வணிகம் செய்யும் நபரொருவர் தமது வியாபார நடவடிக்கைக்காக ஏதாவது பொருளையோ, பண்டத்தினையோ வேறொருவரின் வியாபாரக் கூடத்தினுள் விற்பதோ கூடாது. என்பதுடன் தானும் மற்றொருவருக்கு தமது கூடத்தில் காட்சிப்படுத்து வதற்கோ வியாபாரம் செய்வதற்கோ, இடமளிக்கக்கூடாது.

27. பலாங்கொடை நகர சபையினால் ஏற்கனவே ஆராய்ந்து தீர்மானிக்கப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்ட நபர் ஒருவர் அன்றி வேற்று ஒருவரால் வாரச்சந்தை தொகுதியின் எந்த ஒரு சூழலில் அமைப்பு தன்மையினை மாற்றக்கூடியதாக கட்டடங்கள் அமைப்பதோ, சந்தைத் தொகுதியின் திட்டங்களுக்கு பங்கம் ஏற்படுத்தும் படியான நிர்மாணங்களை ஏற்படுத்துவதோ, இடையூறு செய்வதோ கூடாது.

28. நகர சபையின் தலைவர் அல்லது மேலாண்மை கொண்ட அதிகாரியின் எழுத்து மூல ஆவணம் இன்றி தமது வியாபாரக் கூடத்தில் இணைப்பையோ, இன்னுமொரு தகரக் கூரையினை உருவாக்குவதோ, நிரந்தரமாகவோ அல்லது தற்காலிகமாகவோ அவ்வியாபார கூடத்திலோ அதற்கு அணித்தாகவோ ஈடுபடக்கூடாது.

29. நகர சபைக்கு உரித்தற்ற எந்த ஒரு பெட்டியையோ, மேசை, கதிரை அல்லது அவ்வாறான ஒன்றினை சபைத்தலைவரின் அல்லது மேலாண்மை கொண்ட அதிகாரியின் அனுமதி இன்றி தமது வணிகத் தளங்களில் இணைப்பதோ கூடாததாகும்.

30. சந்தைத் தொகுதியில் பொதுப் பாவனைக்காக இணைக்கப்பட்டுள்ள மின்மாற்றி, மின்கம்பங்களிலோ, பொது நீர்க்குழாய் திருகுகியில் இருந்து இணைப்புகளை தமது வியாபாரக் கூடாரங்களுக்கு பெற்றுக் கொள்ளக் கூடாது.

31. நகர சபையின் தலைவரினாலோ, அன்றி மேலாண்மை கொண்ட அதிகாரியினாலோ வாரச் சந்தை தொகுதியில் விற்பதற்கோ அன்றி காட்சிப்படுத்தியோ, சேமித்து வைக்கப்பட்டுள்ள எந்த ஒரு உணவுப் பண்டத்தினதும் மாதிரிகளை விலைக்கொடுத்து பெற்றுக் கொள்வது சட்டரீதியாவதுடன், அப்பண்டங்களை பகிஷ்கரிப்பதும், கொள்வனவு செய்வோரை தடுக்கவோ முற்படுவதும் கூடாது.

32. சந்தைத் தொகுதிக்கு வருவோர் உள்ளங்கை ரேகைகளை பார்ப்பதுவும், வாழ்க்கை பலாபலன்களை உரைப்பதுவும் கூடாது.

33. வெவ்வேறு வகையான இரசாயன தன்மைக் கொண்ட அல்லது உயிராபத்து ஏற்படுத்தக் கூடிய திரவங்களை விற்பனை செய்வதோ, விற்பனைக்காக பிரசாரங்களில் ஈடுபடுவதோ கூடாது.

34. எந்த ஒரு சமயத்தின் சார்பாகவும் பிரசாரம் செய்வதும், மேடை சொற்பொழிவு ஆற்றுவதும், ஏதாவது மதம் ஒன்றிற்காக பரிந்துரை செய்வதும் கூடாது.

35. சந்தைத் தொகுதியினுள்ளே, அதனை அண்டிய பகுதியிலோ மதுபானங்களை விற்பனைக்கு வைத்திருத்தல், விற்பனைக்காக பிரசாரங்களை மேற்கொள்ளுதல், துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்கவோ கூடாது.

36. சந்தைத் தொகுதியின் உள்ளே வியாபார நோக்கத்திற்காகவோ, வேறு நோக்கத்திற்காகவோ ஒலிப்பெருக்கி சாதனங்களையோ அன்றி நவீன இலத்திரணியல் ஊடகங்களையோ பாவித்து சூழலை மாசடையும் வண்ணம் எல்லை மீறி அதிக ஒலி எழுப்பி வியாபாரத்தில் ஈடுபடக்கூடாது.

37. 36 ஆம் விதப்புரையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருப்பினும் அவசரமும் அத்தியாவசியமும் மிக்க சந்தர்ப்பங்களில், அதாவது பொது மக்களுக்கு அனர்த்தம் சம்பவிக்கக்கூடிய சந்தர்ப்பங்களில் மக்களுக்கு தெளிவூட்டுவதற்காக சக்தி மிகு ஒலி ஊடகங்களை பயன்படுத்த அனுமதியளிக்கும் அதிகாரம் நகர சபை தலைவருக்கு உண்டு.

38. நகர சபையினால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட அதிகாரிகள் வரி வசூலிற்காக சந்தைத் தொகுதிக்குள் பிரவேசிக்கும் போது எந்த ஒரு நபரும் அவர்களுக்கு இடையூறு செய்யக்கூடாது.

39. சந்தைத் தொகுதி பொறுப்பதிகாரியினாலோ, கிராம அலுவலகரினாலோ அல்லது பொலிஸ் உத்தியோகத்தினரினாலோ நகர சபை தலைவரின் அனுமதி பெற்ற ஏதாவதொரு அலுவலகரினாலோ நபர் ஒருவர் வெளியேறும் படி பணிக்கப்பட்டால் சாதகமான துலங்களுடன் வெளியேற வேண்டுமேயன்றி மேற்குறித்த பணியாளருடன் முரண்பட்டு வெளியேற மறுப்பதோ, சுற்றித்திரிவதோ கூடாது.

40. விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள காய்கறி, பழங்கள், கிழங்கு வகைகள் மற்றும் சகல உணவுப் பண்டங்களும் மக்களின் உடல் நலத்திற்கும், சுகாதாரத்திற்கும் பங்கம் ஏற்படுத்தக் கூடாது.

உள்ளூராட்சி மன்றங்களின் கடப்பாடுகள்.

41. நகர சபையினால் கொண்டு நடாத்தப்படுகின்ற எந்த ஒரு வாரச் சந்தையின் சார்பாக இவ் இடைக்கால யாப்பின் கீழ்க் குறிக்கப்பட்ட விதப்புரைகள் அமுல்படுத்த வேண்டியது நகர சபையின் கடப்பாடாகும்.

42. வாரச்சந்தை நடைபெறவிருக்கின்ற தினத்தின் முதல் நாளிலும் சந்தை நடைபெற்று முடிவுற்ற பின்னரும், சந்தைத் தொகுதி சூழலினை முற்று முழுமையாக சுத்தம் செய்து தூய்மைக்காப்பது நகர சபையின் கடமையாகும்.

43. சந்தை தொகுதியில் அமைக்கப்பட்டுள்ள மலசல கூடங்கள் மற்றும் வடிகால் தொகுதிகள் அனைத்திலும் தொற்று நீக்கிகளை நாளொன்றுக்கு ஒரு முறையாயினும் பாவித்தும், சந்தை நடைபெறும் தினங்களில் நாளொன்றுக்கு ஒரு வேளையாயினும் தொற்று நீக்கிகள் தெளித்து தூய்மைப்படுத்த வேண்டும்.

44. 12 ஆவது விதப்புரையிலே குறிப்பிடப்பட்டுள்ள படி நீர்த்தொட்டில், பாத்திரம், தாங்ககளில் சேர்க்கப்படுகின்ற சகல கழிவுகளும் சந்தை நடைபெறும் தினங்களில் ஒரு நாளைக்கு ஒரு வேளையாயினும், தேவை ஏற்படின் பல தடவைகளாவது அங்கிருந்து அப்புறப்படுத்த வேண்டியது நகர சபையின் கடப்பாடாகும்.

45. பலாங்கொடை நகர சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற வாரச்சந்தை நடைபெறும் நாட்கள் பற்றிய முன்னறிவிப்பு நகர சபையினால் தீர்மானிக்கப்பட முடியும். நகர சபையினால் தீர்மானிக்கப்பட்ட விடயத்தின்படி குறிக்கப்படும் தினமும், நேரகாலமும் நகர சபைத் தலைவரினால் சந்தைத் தொகுதி நுழைவாயில் அறிவித்தல் பலகை மூலம் காட்சியப்படுத்தப்பட வேண்டியது சபைத் தலைவரின் பொறுப்பாகும்.

46. சந்தைத் தொகுதி அமைவுற்ற பகுதிகளில் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவது கடமையில் ஈடுபட்டிருக்கும் பணியாளர்களின் பொறுப்பாகும்.

47. பண்டங்களை விற்பனை செய்வதற்கோ, கொள்வனவு செய்வதற்கோ வரும் நபர்கள் அதிகாரிகள் அல்லது பொலிஸாரின் பணிப்புரைகளுக்கு செவிசாய்த்து நடந்து அமைதியையும், சமாதானத்தையும் நிலை நாட்ட ஒத்துழைப்பு நல்க வேண்டும்.

48. சந்தைத் தொகுதி வர்த்தக மையங்களில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள ஒவ்வொருவரும் நகர சபையினால் இடைக்கால யாப்பினிலே முதற்பகுதி உப விதிகளுக்கு அமைய ஏற்பாடு செய்யப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றினை பணம் செலுத்தி பெற்றுக் கொண்டால் அன்றி எந்த ஒரு வியாபார நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது. இக்கட்டணத்தை அவ்வவ்போது மாற்றுவதும் மறு சீரமைப்பதும், அன்றேல் திருத்தம் செய்வதும் நகர சபைக்குள்ள சட்டரீதியான உரிமையாகும்.

பணமும் கட்டணமும் பெறுகை.

49. சந்தைத் தொகுதி வர்த்தக மையங்களை உபயோகப்படுத்தவோ, அன்றி கையாளுவதற்கோ தேவை ஏற்படும் ஒருவருக்கு அனுமதிப் பத்திரம் ஒன்றினை வழங்கவும், அதற்காக பணம் வசூல் செய்வதற்கும் நகர சபையின் செயலாளரினால் அங்கீகாரம் வழங்கப்பட்ட பணியாளரை நியமிக்க முடியும்.

50. அனுமதிப் பத்திரம் வழங்கப்படாத எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பணம் வசூலிக்க முடியாதென்பதுடன் சட்டரீதியாக வசூலிக்கின்ற பணம் நகர சபையின் கட்டளைக்கிணங்க நகர சபையின் வங்கிக் கணக்கிற்கு வைப்பிலிடுவது வசூலிப்பாளர்களின் பொறுப்பாகும்.

51. இவ்விடைக்கால யாப்பிலே 48 ஆவது விதப்புரையிலே கூறப்பட்ட விதிகளின்படி வியாபார கூடங்கள், கடைகள் போன்றவற்றினை ஒருவர் பாவிப்பதற்கோ, கையாளுவதற்கோ குறித்த நபரிடம் இருந்து வரி வசூல் செய்வது சபை செயலாளரின் அனுமதி பெற்ற பணிப்பாளரினால் முடியாதவிடத்து பொது விலைமனு கோரல் மூலம் தெரிவு செய்யப்படும் நபருக்கு ஒப்படைப்பதற்கு நகர சபைக்கு உரிமை உண்டு.

52. 51 ஆவது விதப்புரையின்படி தெரிவு செய்யப்படும் அலுவலர் ஒரு வருட காலத்திற்கு மாத்திரமே கடமை நிறைவேற்றவும், அடுத்துவரும் வருடத்திற்காக மீண்டும் விலைமனு கோரல் மூலம் பணியாளர் ஒருவர் தெரிவு செய்யப்படவும் வேண்டும். எவ்வாறாயினும், முதல் வருடத்தில் தெரிவு செய்யப்பட்ட பணியாளர் அடுத்துவரும் வருடங்களில் விலை மனுவிற்காக விண்ணப்பம் செய்வதையோ அவ்விண்ணப்பத்தினை ஏற்றுக் கொள்வதற்கும் சபை தீர்மானிப்பதாயின் குறித்த பணியாளர் அடுத்து வரும் வருடத்தின் பணியாளராக தெரிவு செய்யப்பட இவ் இடைக்கால யாப்பினிலே தடையொன்றுள்ளதாக கருத்தில் கொள்ளக்கூடாது.

53. இவ் இடைக்கால யாப்பனிலே 48 ஆவது சரத்தில் கூறப்பட்டுள்ளதன்படி சந்தைத் தொகுதியில் வர்த்தக நிலையமொன்றினை பாவிப்பதற்கு பலாங்கொடை நகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டணங்களுக்கு மேலதிகமாக கட்டணம் வசூலிக்க வசூலிப்பாளருக்கும் அனுமதியில்லை.

54. வாரச்சந்தை வரி வசூலிப்பாளருடன் முறையான ஒப்பந்தமொன்றினை செய்து கொள்ள நகர சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

55. இவ் இடைக்கால யாப்பினிலே 50 ஆவது சரத்தின்படி வாரச்சந்தையில் ஏதாவதொரு வியாபார சுய கருத்துப்படியும் விசேட கவனிப்புடனும் அதிகாரம் வழங்குதல் மையத்தினை பாவிப்பதற்கு அனுமதி பத்திரம் பெற்றுள்ள ஒருவர் அதனை வேறொருவருக்கு வழங்குவதோ அது எந்த கடைத் தொகுதிக்கு வழங்கப்பட்டதோ அதற்கன்றி மாற்று கடைத் தொகுதிகளில் வர்த்தகத்தில் ஈடுபடுவது தடை செய்யப்பட்டுள்ளதுடன், நபரொருவர் அவ்வாறு செய்திருப்பதாக பலாங்கொடை நகர சபைத் தலைவருக்கோ அல்லது அதிகாரம் பெற்ற அலுவலர் எண்ணும் வேளைகளில் அவரை குறித்த வியாபார நிலையத்தில் இருந்தும், வர்த்தக நடவடிக்கையை தடுத்து சந்தை தொகுதிகளில் இருந்து

சுய கருத்துப்படியும் விசேட கவனிப்புடனும் அதிகாரம் வழங்குதல்.

வெளியேற்றுவதற்கும், வழங்கப்பட்டிருக்கும் அனுமதி பத்திரத்தினை இரத்துச் செய்வதற்கும் சபை தலைவருக்கும் மற்றும் அதிகாரம் பெற்ற பணியாளருக்கும் உரிமை இருக்க வேண்டும்.

56. நகர சபையினால் வழங்கப்பட்ட அனுமதி பத்திரத்தினை வைத்திருப்போர்களுக்கிடையே அல்லது அனுமதிப் பத்திரம் வைத்துள்ளவரின் கீழ் பணிபுரியும் சேவகர்களுக்கிடையே அன்றி அனுமதிப் பத்திரம் கொண்டவர்களுக்கும், பொது மக்களுக்கும் இடையே வர்த்தக மையங்கள் பாவிக்கப்படுவதன் நிமித்தம் ஏதாவது பிணக்குகள் ஏற்பட்டால் நகர சபைத் தலைவரினாலோ அன்றி அவரால் அதிகாரம் அளிக்கப்பட்ட பணியாளர்களினாலோ தீர்த்து வைக்க முடியும்.

பரிசீலனை முறைமைகள் முறைப்பாடு, நிவாரணம் மற்றும் மேற்பார்வை.

57. வாரச்சந்தை அமைக்கப்பட்டுள்ள காணியினுள்ளே விற்பனைக்காக காட்சிபடுத்தப்பட்ட உணவு பண்டங்கள் தரமற்றவை அல்லது தகுதியற்றவை என சுகாதார வைத்திய அதிகாரியினாலோ அல்லது பொது சுகாதார பரிசோதகரினாலோ, தீர்மானிக்கப்பட்டால் சபை தலைவருக்கோ, சுகாதார வைத்திய அதிகாரிக்கோ, சபைத் தலைவரின் கீழ் இயங்குகின்ற சுகாதார பரிசோதகருக்கோ உணவுப் பண்டங்களை பரிசீலித்து தடை செய்வது சட்ட ரீதியானதாகும்.

58. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்தில் விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது உணவுப் பண்டங்கள் அசுத்தமானவை அன்றி பாவனைக்குதவாதவை என தெரிய வந்தால் அவையனைத்தையும் தடை செய்வதுடன் அவற்றைப் பொது சுகாதாரப் பரிசோதகரிடம் ஒப்படைப்பது அதிகாரம் பெற்ற பணியாளரின் கடமையாகும்.

59. அவ்வாறு 57 ஆவது சரத்திலே விதப்புரை செய்யப்பட்டுள்ளபடி பொது சுகாதாரப் பரிசோதகரினால் அவ்வுணவுத் தொகுதி பரிசீலனை செய்யப்பட்டு பொது மக்கள் பாவனைக்கு உகந்ததல்ல என தீர்மானித்து அழிக்கப்படும் சந்தர்ப்பத்தில் அவற்றிற்கான எவ்வித நட்டஈடும் வழங்கப்பட கூடாது.

60. 59 ஆவது சரத்தின் விதப்புரை செய்யப்பட்டுள்ளபடி பொது மக்கள் பாவனைக்கு பொருத்தமற்ற உணவுப் பண்டங்களை விற்பனைக்காக வைத்திருக்கும் வர்த்தக சட்டப்படி நீதிமன்றத்திலே ஆஜர் செய்து தண்டனை வழங்கிட செய்யலாம்.

61. 60 ஆவது சரத்தின் படி நீதிமன்றமொன்றிலே குற்றவாளியாகத் தீர்ப்பளிக்கப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட ஒருவர் மீண்டும் சந்தைத் தொகுதிக்கு வர்த்தக நடவடிக்கைக்கு வருவதோ, அன்றேல் அவரை அனுமதிப்பதோ நகர சபையின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்.

62. நபரொருவருக்கு ஏதாவது நிவாரணம் ஒன்றினை எதிர்பார்க்கும் போது அது தொடர்பான எழுத்து மூலமான நிவாரண விண்ணப்பத்தினை பரிசீலிக்கும் உரிமை பலாங்கொடை நகர சபைக்கு உண்டு.

63. வாரச்சந்தையின் முழுமையான மேற்பார்வை நடவடிக்கை நகர சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இடைக்கால யாப்பினை மீறுதல்.

64. இவ் இடைக்கால யாப்புத் தொகுதியினுள்ளே ஏதாவது சரத்தினையோ உப சரத்து விதிகளையோ மீறுவதோ, அன்றி ஊதாசினம் செய்வதோ, கடைப்பிடிக்காமல் விடுவதோ சட்டப்படி குற்றமொன்றாகும்.

தண்டனைகள்.

65. இவ் இடைக்கால யாப்பில் எந்த ஒரு விதப்புரையும் மீறுதல் குற்றமாவதுடன், நபரொருவர் நீதி மன்றத்தினால் குற்றவாளியாக்கப்படும் போது 1939 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்க நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் அல்லது 255 ஆம் அதிகாரத்தின் 153(2) விதப்புரையின் படி தீர்மானிக்கப்பட்ட தண்டப் பணத்தின் மூலமும் குற்றவாளியாக முடிவுற்ற பின்னர், அவ்வாறான குற்றத்தினை தொடர்ச்சியாக செய்து கொண்டு போவாரேயானால் சட்ட மீறலை உற்று நோக்குவதன் மூலம் பலாங்கொடை நகர சபை தலைவரினாலோ அன்றி செயலாளரினாலோ அன்றி அதிகாரம் அளிக்கப்பட்ட பணியாளரினாலோ எழுத்து மூலமான அறிவித்தல் கொடுக்கப்பட்ட பின்னரும் குறித்த குற்றத்தினை புரியும் ஒவ்வொரு நாளிலும் 1939 ஆம் ஆண்டு 61 ஆம் இலக்கம் கொண்ட கட்டளைச் சட்டத்தின் படியோ அன்றி 255 ஆம் அதிகாரத்தின் 153(2) ஆம் விதப்புரையின் படி தீர்மானிக்கப்படும் மேலதிக தண்டப் பணத்திற்கு உள்ளாக நேரிடும்.

66. இவ் இடைக்கால யாப்பினிலே சிங்கள, தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூல பிரதிகளில் ஏதாவது கருத்துக்களில் பொருத்தப்பாடு இல்லாவிடின், சிங்கள மொழி மூல யாப்பிலே காணப்படுபவையே இறுதிக் கருத்தாக நோக்கப்படும்.

67. இவ் இடைக்கால யாப்புத் தொடரினிலே ஏதாவது விதப்புரைகளோ, விதப்புரையின் உப பிரிவுகளோ அன்றி முழுமையாக இடைக்கால யாப்பின் பிரிவுகளோ திருத்தப்படுவதற்கோ அன்றி மாற்றியமைப்பதற்கோ பலாங்கொடை நகர சபைக்கு உரிமை உண்டு.

68. பதம் தொடர்பான அர்த்தப்படுத்துதல் இவ் இடைக்கால யாப்பினில் — வியாக்கியானப் படுத்துதல்.

(i) "சபை" என்பது பலாங்கொடை நகர சபையினையும்,

(ii) "தலைவர்" என்பது பலாங்கொடை நகர சபையின் தலைவரையோ அல்லது அப்பதவிக்காக இணைப்பீடு செய்யப்படுபவரையோ குறிப்பதாகவும்,

(iii) "செயலாளர்" என்பது பலாங்கொடை நகர சபையின் செயலாளரையும்,

(iv) "அலுவலர்/பணியாளர்" என்பது சபைத் தலைவராலோ, செயலாளரினாலோ நியமிக்கப்படும் உத்தியோகத்தரையும்,

(v) "வாரச்சந்தை" என்பது நகர சபையினால் பெயரிடப்பட்டு நடாத்தப்படும் சந்தை அல்லது சந்தைகளாகவும்,

(vi) "வர்த்தகர்" என்பது வாரச்சந்தைத் தொகுதிக்கு பொருட்பண்டங்களை விற்பனைக்காக கொண்டு வருகின்ற ஆண்/பெண் இரு பாலரையும் குறிப்பதுடன்,

(vii) "நுகர்வோர்" என்பது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள பொருட்பண்டங்களை விலை கொடுத்து வாங்குகின்ற ஆண்/பெண் இரு பாலரையும் குறிப்பதுடன்,

(viii) "யாராவது நபரொருவர்" என்பது சந்தைத் தொகுதிக்கு வருகின்ற வியாபாரி, நுகர்வோர், அலுவலர், பணியாளர், ஆண்/பெண் இரு பாலர் மற்றும் வணக்கத்துக்குரியவர்கள் அனைவரையும் குறிக்கும்.

(அ) உப பிரிவு அட்டவணை

இவ் அனுமதிப் பத்திர உரிமையாளராகிய ........................................................................ ,

........................................................................ இல் நிரந்தர வதிவிடத்தை கொண்டிருப்பதுடன், முட்டை, வெல்லம் (கருப்பட்டி), பழவகை, காய்கறி, தானியம் மற்றும் கிழங்குவகை அன்றேல் சேனையிலோ அன்றி தோட்டங்களில் பயிரிடப்பட்ட அல்லது வேறு பொருட்பண்டங்களோ பலாங்கொடை ஞாயிறு சந்தை தினத்திலே ......................................திகதி, மு. ப. ............. தொடக்கம் பி. ப. ......................... வரை சந்தையின் பொறுப்பதிகாரியினால் அன்றேல் தலைவரினால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலரினால் வர்த்தக கூடம் ஒன்றிலோ அன்றி குறித்த இப்பகுதியிலோ வியாபாரம் செய்வதற்கு இத்தால் அனுமதியளிக்கப்படுகின்றது.

................................................
தலைவர்/அதிகாரம் பெற்ற அலுவலர்.

ரூபா : [ ]

திகதி : ................................

8 - 1222

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.